காவியம்

ஆசிரியர்: சுரதா.

(கவிதை வார இதழ்)

சுவடி 1: ஏடு 1 | சென்னை: திருவள்ளுவராண்டு, 1987, புரட்டாசி 1 | 17—9—55 | விலை அணா 1

நமக்குக் கிடைத்த நாத்திகக் கவிஞர்



கூத்தடித்துக் கொண்டிருக்கும் புராண நூலின்
கொட்டத்தை அடக்கிவரும் கவிஞன். நல்ல,
நாத்திகன்! நற்றமிழன்! இந்நூற் ருண்டு,
நம் நாட்டுக் களித்துள்ள, எழுத்துச் செல்வம்,
ஆத்திகர்க்கு வேப்பங்காய், நமக்கு மாங்காய்.
அகத்தியர்போல் உடல்மரணம் மட்டும் உள்ளோன்.
சூத்திரனே என்பவனை, உதைக்கச் செல்லும்
சுப்புரத்தி னக்கவிஞன்! எதிர்ப்பில் வாழ்வோன்

நீச்சலடித் திடுதற்கே அச்சங் கொள்வோர்,
நீர்க்கடலி லாமுத்து எடுப்பர்? ஆட்டின்
மேய்ச்சலைப்போல் நுனிக்கல்விப் பயிற்சி பெற்றோர்
முத்தமிழை உணர்வாரோ? உணரார்! ஆனால்,
பேச்சுமட்டும் பிரமாதம் அவர்க்கு. இந்தப்
பெருங்கவிஞர் அவர்க்கெதிரில் வந்து விட்டால்,
காய்ச்சலொடு படுப்பவரும் உண்டு! இன்னார்க்
கவிதையினால் பிழைப்பவரும் நாட்டில் உண்டு!

கல்லாதார் இவர்க்கவிதை தன்னைக் கேட்டால்,
கட்டாயம் இருசெவிக்கும் பசியெ டுக்கும்.
சொல்லாட்சி; சுயவிளக்கம்; புதுமை; காதற்
சுவையோடு இவரளிக்கும் உவமை; யாவும்,
எல்லார்க்கும் வந்திடுமா? கிட்டத் தட்ட
எல்லாரும் பேர்பெறுவர். ஆனால்; கீர்த்தி,
எல்லாரும் பெறுவதில்லை. அந்தக் கீர்த்தி,
இவர்போன்றக் கவிஞர்களே பெறுதல் கூடும்.

பேரறிஞன் உமர்க்கய்யாம்; "பெண்ணே பாரில்,
பெரும்போதைப் பொருளெ"ன்றான். இவரும் சொன்னார்.
ஊருக்கு உழைப்பதுதான் "யோகம்" என்று,
உரைத்திட்டார் பாரதியார். இவரும் சொன்னார்.
ஆரியத்தில் சிக்காதீர் உலகீர்—என்றார்,
அருட்பாவில் ராமலிங்கர். இவரும் சொன்னார்.
வேரறுக்கும் இப்புரட்சிக் கவிஞர், கற்றார்
விரோதத்தைச் சர்க்கரையென் றெண்ணும் மன்னர்.

தேரிழுக்கும் தேசத்தில், தருமன் போன்று,
சீட்டாடும் அரசாங்கந் தானி ருக்கும்.
வாரிருக்கு, தோலிருக்கு, என்னும்; நந்தன்
வம்சத்தான் அந்நாட்டில் உள்ள மட்டும்;
ஏரிழுக்கும் எருதொன்று தொலைந்தால், அந்த
இடைவேளை உழவுக்கு அவனே மாடு.
ஆரியத்தை ஆதரிக்கும் ஆண்டிப் பாட்டே
அந்நாட்டின் அரசாங்கப் பாட லாகும்!

இவ்வாறும்—இவைபோன்று இன்னும்; மாந்தர்க்
கெத்தனையோ சிந்தனைகள் தந்த சிங்கம்,
செவ்வாழை மரம்போன்று; தனக்குப் பின்னர்
செல்வாக்குப் பரம்பரையை வைத்தி ருப்போன்.
எவ்வாறு பார்த்தாலும், இவர்க்கு ஈடு
இவரேதான். இதுவரையில், கிளிகள் கொத்திக்
கௌவாத கொய்யாவும் இல்லை, இன்னார்க்
கவிதைகளை வெறுப்பாரும் நாட்டில் இல்லை.

சாவா மருந்து

கண்ணிற் சிறந்த வுறுப்பில்லை—கொண்டாளின்
துன்னிய கேளிர் பிறரில்லை; மக்களின்
ஒண்மையவாய்ச் சான்ற பொருளில்லை; ஈன்றாளோ
டெண்ணக் கடவுளு மில்!

—நான்மணிக்கடிகை.

திராவிட நாட்டுப் பிரிவினை வாரம்; நம் கழகத்தின் அரசியல் சாரம்!

இதயம்

சென்னை 17—9—55 சனி

செப்டம்பர்...17
செப்டம்பர்...17
செப்டம்பர்...17

பெரியார்.



தாக்குதல் எதற்கும் அஞ்சாத்
  தைரியச் சிங்கம்! சாதி
நாக்கினை அசைத்து வாழும்
  நரிச்செயல் ஆரி யத்தைத்,
தூக்கிலே மாட்டு கின்ற
  சுயமரி யாதை இயக்கச்
சாக்கிரட் டீசு—இன்னார்
  சனித்தநாள் இந்த நாளே!

தி. மு. க.

ஈடிலாப் புதுமை எண்ணம்
  ஈபவர்; இனிக்கும் பேச்சுப்
பாடகர்; அறிஞர்; கல்விப்
  பயனெனப் பயன ளிப்போர்.
தாடியில் லாத பர்னாட்
  சாநமக் கமைத்துத் தந்த
வாடுதல் இல்லாக் கட்சி
  மலர்ந்தநாள் இந்த நாளே!

காவியம்.

'காவியம்' இன்று தோன்றும்
  கவியிதழ்; இதுவே, நல்ல
சேவைகள் புரியும், கொம்புத்
  தேன்சுவை எழுத்து மூலம்!
கோவிலின் வியாபா ரத்தைக்,
  கொட்டிடும் தேள்ம தத்தை;
ஆவிவைத் திருக்கு மட்டும்,
  அழித்திட வேலை செய்யும்.

நூல் விளக்கம் - 1.

கல்லாடம்

கல்லாடம் மிகச்சிறந்த கவிதை நன்னூல்.
கற்பனைக்குப் பஞ்சமிலா அந்நூ லுக்குக்
கல்லாடர் ஆசிரியர். அவரோ, சங்கக்
காலத்தி லேவாழ்ந்த கவிஞர். கட்டி
வெல்லந்தான்; அகப்பொருளைப் பற்றி அந்நூல்
விரித்துரைக்கும் ஆசிரியப் பாக்கள் நூறும்.
சொல்லறிஞர் மயிலேறும் பெருமாள் பிள்ளை,
சுவைமிக்க உரைஅதற்குச் செய்து உள்ளார்.

★ ப ழ னி ★

குதித்தபடி பெரியமுண் டாசு கட்டிக்
  கொண்டுவரும் புலவர்களை வென்று; சேது
புதியரசர் பாராட்டை; அவர்கொ டுத்த
  பட்டத்தை; விருதுகளை; அதிகம் பெற்று,
மதிப்புள்ள கலைநூற்கள் எழுதி வைத்த
  மாம்பழக்க விச்சிங்கம் பிறந்த பூமி;
"பொதினி" என முன்னாளில் அழைக்கப் பட்ட
  புகழ்மிக்கத் தென்பழனி நகர மாகும்.

அம்மி

சந்தைக்குச் சென்றிருந்த குப்பன்; அந்தி
  சாய்கின்ற நேரத்தில் திரும்பும் போது,—
பந்தெடுத்து விளையாடும் மனைவி மீது,
  பழமெடுத்து அடிக்கின்ற இரவு நேரம்
வந்தாலன் றோஇனிக்கும் இளமை! காலை
  வந்தென்ன போயென்ன? என்ற காதற்
சிந்தொன்று காதில்விழச் சிலிர்த்தான். சிந்து,
  தெரிவிக்கும் வார்த்தையினால் வெப்ப மானான்.

சோலைதனில் குளிருண்டு; குப்பன் கால்கள்
  தொடுகின்ற தரைஎங்கும் ஈர முண்டு;
நீலநிற மேகங்கள் நெடுவா னத்தில்
  நீந்திவரும் கார்காலம் அப்போ துண்டு;
மாலையுண்டு; தென்பொதிகை மலையை விட்டு
  வருகின்ற தென்றலுண்டு எனினும்; அந்த
வாலிபனோ இவையாவும், தனக்குப் பாலை
  வனமென்றே தான்நினைத்தான், விரகத் தாலே!

பேர்வாய்ந்த படைகொண்டு வடநாட் டாரைப்
  பிணமாக்கிப் புகழ்தேக்கி வந்த சேரன்,
தேர்போல விரைந்திட்டான்; வந்தான் வீடு,
  'செம்பவளம்!' என்றழைத்தான், மனைவி வந்தாள்.
'நீர்வேண்டு மா'என்றாள் நங்கை. 'கண்ணே
  நீயல்லவா வேண்டும்' என்று கூறிப்
பார்வையினால் காதல்மொழி பேசக், குப்பன்
  பசிதன்னை உதட்டாலே தணித்து வைத்தாள்!

முதற்கட்டம் முற்றியது. அவர்கள் எச்சில்
  முத்திரைக்குப் பின்னெதுவும் நடத்த வில்லை.
அதிகரித்த ஆசையொடு கணவன் நிற்க;
  அம்மிதனில் மிளகாயை அரைக்க லுற்றாள்.
செதுக்காத சிலையழகி, தொடர்ந்து வேலை
  செய்தபடி, நாயகனை நிமிர்ந்து நோக்கி;
"எதற்காக இக்கல்லை, அம்மி என்று
  இந்நாட்டு முன்னோர்கள் அழைத்தார்"—என்றாள்.

"அம்பெடுக்கும் தமிழ்நாட்டைத் தர்ப்பைப் புல்லால்
  ஆட்டிவைத்துக் கொண்டுவரும் ஆரி யத்தைக்
கொம்போடு, கிளையோடு, தரைக்குள் ஓடிக்
  கொண்டிருக்கும் வேரோடு, வீழ்த்து கின்ற
மும்மணியே! மின்னொளியே! **மிளகாய்ப் பூண்டு
  முதலான பொருளையெல்லாம், குழவி கொண்டு
அம்முவதால், இக்கல்லை, அம்மி என்று
  அந்நாளில் பெயரிட்டு அழைத்தார்,"** என்றான்.

செம்பவளம் இதைக்கேட்டு மகிழ்ச்சி யோடு
  சிற்றின்ப உதடுதனைத் திறந்து—"அத்தான்!
நம்முத்தம் போலினிக்கும் சொல்வி ளக்கம்
  நற்றமிழின் வளர்ச்சிக்குத் தேவை—என்றாள்.
கொம்புக்கும் இதுபோன்று, தழுவிக் கொள்ள,
  கொடிஇங்கே, இப்போது, தேவை—என்றான்.
அம்புநிகர் கண்சண்டைக் காரி—அந்த
  ஆணழகன் அங்கத்திற்கு ஆடை யானாள்!



★★★★★★★ ★★★★★

அதிவீரராம பாண்டியன்

அதிவீர ராமனென்போன், கொற்கை என்னும்
அழகுநகர் தனையாண்ட அரசன்; வீரன்;
புதுச்சிந்த னைக்காரன்; புலவன்; போலிப்
புலவரையெல் லாந்தலையில் குட்டி வந்தோன்.
கதைக்கவிதை இயற்றுவதில், நம்பு ரட்சிக்
கவிஞரைப்போ லேசமர்த்தன்; மாதர் இன்பம்,
எதற்கென்று வாதமிடும் வேதாந் தத்தை,
எதிர்த்திட்டோன்; சிற்றின்பப் பிரியன், அன்னோன்!

பன்மொழியில்; பலகலையில்; தர்க்கந் தன்னில்;
பாண்டித்யம் பெற்றிருந்த பாண்டி நாடன்;
தென்மொழிக்கெல் லாம்மூல மொழியாய் நின்று,
தித்திக்கும் செந்தமிழில்; நிடத நாட்டு
மன்னவனின் வரலாற்றை எழுத லுற்றான்.
வானத்தின் வழியாக வெய்யில் வட்டம்,
முன்னோட, அதன்பின்னே நாட்கள் ஓட,
மூன்றாண்டு முடிந்தும்நூல் முடிய வில்லை!

தேர்ந்தஅறி வாளரெலாம் நூலி யற்றும்
சிரமத்தை நன்குணர்வர்; புதிய எண்ணம்
சேர்த்துவொரு சிறுகவிதை இயற்று தற்கே,
சிலநாட்கள் வேண்டுமெனில்; எந்த நாளும்
கீர்த்திதரும் நைடதம்போல் ஒன்றி யற்றல்,
கிள்ளுக்கீ ரைச்செயலா? பிறர்நூல் தன்னைப்
பார்த்தெழுதும் திருடருக்கு வேண்டு மென்றால்,
பகலொன்று இரவொன்று இருந்தாற் போதும்.

நளனென்னும் நாமமிடாச் சக்ர வர்த்தி;
நாடாண்டு, சூதாடித் தோற்று, காதல்
வளர்க்கின்ற மனைவிதனை, மகனை, நல்ல
வாலிபத் திலேபிரிந்து; அணைந்து போன
விளக்கைப்போல் பலஆண்டு இருந்து, பின்னர்
வேதனையில் மீண்டெழுந்த கதையைச்—சங்கம்
வளர்த்தவர்கள் தந்ததமிழ்ச் சொற்கள் ஊட்டி,
வளர்த்துக்கொண் டேயிருந்தான் கொற்கைக்கோமான்!

கார்காலத் தில்முடித்தான் காவி யத்தைக்,
காமத்துப் பால்விரும்பும் வேந்தன். "கற்றோர்
பார்வைக்கு அனுப்புங்கள் நூலை, அன்னோர்
பார்க்கட்டும்" என்றுரைத்தாள் பாண்டி ராணி.
"கார்காலம் மாறட்டும்; குளிரெ டுக்கும்
காலத்தி லேஎதற்கு?" என்று கூறி;
வேர்க்காத மழைமாதம் முடியு மட்டும்,
வேர்வையொடு மனைவிக்குப் போர்வை யானான்.

ஆரம்ப மாயிற்று நைட தத்தின்
அரங்கேற்றம்; குளிர்தீர்ந்த நாளில்! நூலின்
சாரத்தைச் சுவைபார்த்து வந்தார், கல்விச்
சபைமீது வீற்றிருந்த புலமை மிக்கோர்.
வாரம்ஒன் றாயிற்று. நிடத நாட்டின்
வர்ணனையை விவரித்து முடிப்ப தற்கு.
வீரத்தை உடையஅதி வீரன்; மேலும்
விளக்கிக்கொண் டேபோனான் காவி யத்தை!

மேகங்கள் வாய்திறக்கும் போது தோன்றும்
மின்னல்தனை மெதுவாகப் பிடித்துப், பெண்டிர்
தேகத்தை அம்மின்னல் தன்னாற் செய்தான்,
சிருட்டிக்கும் தொழிலுடையோன். மீண்டும், மேலே
போகவழி பார்க்கின்ற மின்னல் தன்னைப்
போகாமல் அங்கேயே தங்க வைக்க;
மேகங்கள் மதிக்கின்ற மலையைத் தூக்கி
மின்மீது, இருகொங்கை யாக்கி வைத்தான்.

இதுபோன்ற கருத்துள்ள செய்யுள் ஒன்று
இருந்திட்ட ஏடுதனை எடுத்து, அந்த
அதிவீரன் வாசித்தான். அதனைக் கேட்டு
அங்கிருந்த பெரும்பாலோர் அடடா என்றார்.
"மதிமிக்க மைத்துனரே! இந்தப் பாட்டில்,
மலைவைத்த காரணத்தைக் கூறி னீரே;
இதுமட்டும் சரியில்லை என்பேன்"—என்றாள்;
இடைநடுவில் அவன்அண்ணன் மனைவி ஆங்கே!

"மின்னலுக்கு என்னசெயல்? நெளியும்; கெண்டை
மீனைப்போ லேபிறழும்; துடிக்கும்; மேலே
சொன்னபடி செயல்புரியும் மின்னல் மீது,
சுமைவைத்தால்; அச்சுமையைத் தள்ளி விட்டுப்
பொன்னைப்போல் ஒளிவீசும் அந்த மின்னல்,
போகாதோ விண்மீது? போன பின்னர்
என்னசுமை இருந்துத்தான் என்ன? தோல்வி
யாருக்கு? பிரமனுக்கா?, உங்க ளுக்கா?"

மங்கையவள் இவ்வாறு, கேட்க; அந்த
மன்னவனோ, நெற்றிதனைச் சுருக்க லுற்றான்.
செங்கதிரோன், கீழ்வானம் வரட்டும்; நாளைத்
தெரிவிக்கின் றேன்விளக்கம்—இதற்கு" என்றான்.
அங்கிருந்தோ ரும்சென்றார் விரைந்து; வேந்தன்
அதிவீர னும்சென்றான், வெட்கத் தோடு.
செங்கரும்பு ராணியிடம், நடந்த வற்றைத்
தெரிவித்துத் தன்குறைக்கு வருந்த லுற்றான்.

இதற்காக வா,கவலைப் படுகின் றீர்கள்.
இருக்கட்டும், இதற்குவிடை கூறு கின்றேன்;
பதைக்காதீர் என்றாள்பட் டத்து ராணி.
பார்த்திபனோ, பதைப்போடு "பால்நி லாவே!
அதைஇப்போ தேஎனக்கு உரைப்பாய்; இன்றேல்,
அந்தியிலே குனிந்தமனம் நிமிரா" தென்றான்.
புதுமுத்தப் பயிற்சியிலே பொழுது போக்கும்
பொற்பதுமை, விடைகூற வாய்தி றந்தாள்.

"மதிமிக்க அறிஞர்க்கும்; கவிவா ணர்க்கும்,
மறதியினால் சிலசமயம் தோல்வி நேரும்.
அதுபோன்று தோல்விவரும் தருணம்; நீங்கள்
அச்சபையைக் கலைத்தீர்கள். மெச்சு கின்றேன்;
புதுவாழ்வு அளித்துவரும் அரசே! இந்தப்
புவிதன்னைப் படைத்திட்டோன், அந்த மின்னல்;
அதுபோன்று நடக்காமல் இருக்கத் தானே
ஆணியடித் திருக்கின்றான் மலையின் மீது!"

என்றுஅவள் மறைபொருளாய்க் கொங்கை மீது,
இருக்கின்ற குறிபற்றிக் குறிப்பு தந்தாள்.
சொன்னவுடன் மன்னவனும் புரிந்து கொண்டான்,
சுந்தரியின் பேச்சுதனை. "அரங்கேற் றத்தில்,
உன்னாலே பாராட்டுப் பெறப்போ கின்றேன்,
ஓடிவந்து ஆடுகின்ற மயிலே!"—என்றான்.
என்னாலே பாராட்டுப் பெற்றால்; உங்கள்
இதழாலே புதுசாரம் பெறுவேன்"—என்றாள்.

பக்கத்தில் பச்சைமயில்; மயிலின் பக்கம்,
பதினாறும் நூற்றாண்டில் வாழ்ந்த, அந்தக்
கொக்கோக எழுத்தாளன். இரண்டு பேரும்,
கொத்துதற்குத் துடித்துக்கொண் டிருந்தார் ஆங்கே!
சர்க்கரையே! என்றழைத்தான். உடனே மங்கை;
சர்க்கரைக்குத் தமிழிற்சொல் இலையோ? என்றாள்.
"அக்காரம்" என்றதமிழ்ச் சொல்லுண் டென்றான்.
அதற்குப்பின் அவளிதழைக் கனிபோல் தின்றான்.

சுரதா

போர்ச்சு கீசியப் போராட் டந்தனில்,
விடுதலைக் குரலை வீறிட் டெழுப்பிய,
மதுரை மறத்தமிழ் மாது—**சுபத்திரா
தேவி** எழுப்பிய தீப்பொறிப் பேச்சைக்,
கர்ச்சனை புரியும் கவிதைக ளாக்கி,
மருத்துவன் தந்திடும் மருந்து போல,
அளவொடு தந்துளோம், அச்சு எழுத்திலே!

இவர்கள் யார்?

அந்தந்த நாட்டினைச் சொந்தக் குடிமக்கள்
ஆளுவ தன்றோ அரசுரிமை-இங்கு
வந்து இறங்கிய அந்நியர்க் கிந்திய
மண்ணில் உரிமைகள் என்ன உண்டு?

நட்டு வளர்த்த மரத்தினி லோர்சிட்டு
நாலாறு ஆண்டு வசித்தி டினும்-மஞ்சள்
பட்டுச் சிறகு விரித்திடும் சிட்டுக்கப்
பச்சை மரம் சொந்த மாய்விடுமோ?

எத்தனைக் காலம் இருப்பினும் அந்நியர்க்
கிந்தியா, பிச்சைக்குடித் தனமே-நாட்டை,
ரத்துச் செயும்படிச் சொல்லிடு வோம் -
ரத்தச் சரித்திரம் கண்டிடுவோம். [மீறின்,

அன்னமே என்று அழைத்திடும் ஆண்களே!
ஆவேசத் தோடு எழுந்திடுவீர்-அங்கு
என்ன நடந்திடும் பார்த்திடுவோம்-கோவா
எத்தர்க் கணக்கினைத் தீர்த்திடு வோம்!

முத்தமிடும் புதுக் காதலர்க்கும் இன்று,
முக்கியம், நாட்டின் விடுதலைதான்-வீரச்
சத்தங் கொடுத்துப் புறப்படுவோம்-
சாவு வரினும் சிரித்திடு வோம்! [போரில்

தேகம் எடுத்திட்ட மானிடர் யாவரும்
செத்து மடிவது நிச்சயமே-இன்று
சாகத் துணிந்து எழுந்திடு வோம்-கோவா
சர்க்காரை ஓட்டி விரட்டிடு வோம்!

வெள்ளையர் தம்மையே பெட்டி சட்டியொடு
வீட்டுக் கனுப்பிய நம்மவர்க்கு-இந்தச்
சுள்ளியின் கட்டுகள் எம்மாத் திரம்-பெருந்
தூணுக்கு முன் அவை நின்றிடுமோ?

★

எப்போதும் இருப்பவர்



தமிழ்த் தென்றல் திரு. வி. க.

சாதுக்கும் சாது! கல்விச்
சாலைக்கு. நூலைப் போன்றார்.
மாதர்க்கும், தொழிலா ளர்க்கும்,
வாழ்வெலாம் பாடு பட்டார்.
சாதிக்குப் பகைவர் இந்தச்
சரித்திரத் தமிழர்.—இந்தத்
மேதைக்கு நிகராய் மற்றோர்
மேதையை என்று காண்போம்?

★

இந்த வழித்துணை ராமன் என்பவர்,
இளநீர்க் கவிஞர்!, எழுத்தில் வல்லவர்!
தென்பாண் டிநாட்டுத் திராவிட இளைஞர்!
பொன்னியில் எழுதிப் புகழடைந் தவரே!

—ஆ-ர்.

மலரே!

மாலைக்கு உருவம் நீதான்!
மணத்திற்குச் சாட்சி நீதான்!
சோலைக்கு அழகு நீதான்!
சுடரொளித் தீபம் நீதான்!
வண்டுக்குப் படுக்கை நீதான்!
மது தரும் கிண்ணம் நீதான்!
கண்ணுக்குப் பொருத்தம், நீதான்!
காற்றுக்கு வாசம் நீதான்!

—வழித்துணை ராமன்

நமது மேடை

12—9—55

மக்கள் அனைவரும் மதித்துப் புகழும்,
பாரதிக் கவிஞனைப் பற்றி, அறிஞர்
அண்ணா அவர்கள் அரிய தொருரை,
புகழ்மிகு ராய புரத்தில்,
ஆற்றினர் அவ்வுரை அமுதெனஇனித்ததே

○

17—9—55

கற்றோர் மிகுந்த காட்டுப் பாடியில்,
அன்பர் கிருட்டின ராசு அவர்கள் -
தலைமை வகித்து நிலைமையை விளக்கிப்
பேசிய பின்நம் பொதுச்செய லாளர்
இரா. நெடுஞ்செழியன் எழுந்து-திராவிட
நாட்டுப் பிரிவினைக் கேட்டு வருவது,
ஏன் எனும் கேள்வி எழுப்பிப் பேசுவார்-
தக்க காரணம் தந்து, ஆங்கே!

இவர்......

சித்திரம் தீட்டிய 'சித்ரன்' என்பவர்
திருப்பூர் தந்த சிறந்த ஓவியர்.
அனைவர் கண்களும் ஆசைப் படும்படி,
எழுதும் திறமை இவருக் கதிகமே!

வருந்துகின்றோம்!

தஞ்சைமா வட்டம் தந்த தி.மு.க.
பிரதிநிதியாகிப் பெருந்தொண்டு புரியும்,
சே.ப. சேது பதிக்கும்; அவரது,
தம்பி சே. ப. சதாசிவத் திற்கும்,
பிதாவாய் விளங்கிய பெரிய சாமித்
தஞ்சை ராயர்—தரும குணத்தர்:
எல்லா ருக்கும் நல்லவர்; கடந்த
தேதி இருபத் தெட்டில் திடீரெனத்,
தேன்தமிழ் வளர்க்கும் திருவா ரூரில்,
கால மானஅக் கண்ணீர்ச் சேதி
வந்தது கேட்டு, வருந்து கின்றோம்!
தூக்கம் நீக்கித் துயரில் வீழ்ந்துள
அன்னார் குடும்ப அங்கத் தினர்க்கு,
நசுங்கிய நினைவொடு நமதனு தாபமே!

—ஆ-ர்.

கவிஞர்களுக்கு!



எழுத்துக்கு மேலே இருக்கும் சித்திரம் பற்றி, மனதிற் படியும் முடிவினைக் கவிதைக ளாக்கிக் காவியத் திற்கு அனுப்பலாம்; அப்படி அனுப்பும் கவிதையில், புதிய கருத்துப் புகுந்துகொண் டிருத்தல் அவசியம். அத்துடன், அனுப்பும் கவிதை; ஆண்ட சேரன் அழகுதேர் ஓடிய வீதிபோல்-நீண்டு விடாது இருத்தல் வேண்டும், இதற்கு-விவரம் இதுவே! (ஆ-ர்)

இசைப் பாடல்—1.

காவிரி நதியே!

(எடுப்பு)

பூவிரியும் சோலைக் காவிரி நதியே!
பொன்னியே! கடல்தொடும் கன்னியே! (பூ)

(மேல் எடுப்பு)

தாவுங் கருவண்டு ஆசை மிகக்கொண்டு
தனித்தமிழ் இசைபாடித் தன்னைநாடி வரும்என்று (பூ)

(அமைதி)

மரமும், பயிரினமும், பருகிடும் பாலே—குடகு
மலைமீதிருந்து மேகம் நீட்டிய காலே!
விரிந்த புகழ் அடைந்தாய் மூவேந்தரைப் போலே,
விளைவும், செல்வமும், தென்னாட்டில் உன்னாலே (பூ)

பொன்னியே என்று நீபிறந்த தேதி—உதிரம்
போலவே உனக்கும் இல்லையே சாதி
உன்னுடல் தனைமறைக்கத் தண்ணீர்தான் துணியோ?
உருண்டோடும் கூழாங்கல், உன் மாலையின் மணியோ? (பூ)

ஆசிரியரும், வெளியிடுபவரும்:—சுரதா, 12, படவேட்டம்மன் கோவில் தெரு, சென்னை-12. அச்சிட்டது: D. ரத்தினவேலு, ஸ்ரீ பாரதி பிரஸ், 19, ஆலத்தூர் சுப்பிரமணிய ஆச்சாரி தெரு, சூளை, சென்னை-1